முருகப்பெருமான் துணை

**மகான் சக்தி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.07.2022, வெள்ளிக்கிழமை

1. அருட்குருவே அரங்கா போற்றி
ஆற்றலாக வந்தநல் ஞானதேசிகா
அருட்சுடர் ஏற்றி உலகோர்க்கு
ஆறுமுகனார் வழிபாட்டை அருளும் குருராஜா
2. அரசனே அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரமென சஷ்டி திகதி புகரோன் வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 06 நாள், 22.07.2022 வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே சக்தி நாயனார் யானும்
தாமுரைப்பேன் உலகோர் நலம் பெற
அண்ணல் அரங்கன் திருவடி பற்றிவர
அனைவருக்கும் இலகுவாய் சித்தி காணும்
4. காண்கவே அரங்கனின் திருநாமத்தை
கண்டுரைப்பேன் உலகமக்கள் அனுதினமும்
நன்மை கருதி செபதபமாகச் செய்து
நம்பிக்கை வைத்து வருதலுற
5. வருகவே அரங்கன் பார்வைவழி
வரமாக நிலைமைகள் யாவும்
வருமுலகில் சரியாகி ஞானபலமாக
வளர்ந்து கலியுக மக்களுக்கு
6. மக்களுக்கு சர்வ பலமும் திடமும்
மரணம் வெல்லும் மகா சூட்சுமமும்
ஆக்கமுடன் எல்லா வகையிலும்
ஆற்றலும் தேற்றமும் கண்டு சிறப்பர்
7. சிறப்புதரும் சன்மார்க்க வழியை
சித்திகள் உலகோர் அடைய
அறமாக அரங்கன் அருளிட
அனுகவே அனைவருக்கும் மார்க்கம்
8. மார்க்கம் உயர் வழிகளாகியே
மண்ணுலகில் துணை வந்துமே
பார்த்துரைக்க எல்லா வகையும்
பாதுகாப்பு சக்தியாக மாறும்
9. மாறவே மக்களிடை தொடரும்
மாயை வினை குற்றமெல்லாம்
கூறவே விலகி நல்வினையாக
குறைவிலா ஏற்றம் கண்டு

10. கண்டுமே அரங்கன் தேடும்
கருணையுள்ள மக்களாக
தொண்டுவழி இன்னும் தேறி
திருவருள் பெற்ற ஞானவான்களாக

11. ஆகவே உலகம் நிறைந்து
ஆறுமுகனார் ஆசி பெற்ற
செகமெல்லாம் ஞான ஆட்சிமலரும்
செப்பிவந்த அருளாசி முற்றே

–சுபம்–